RNI-N0: TNTAM/2021/83936
Postel Regd. No: TN/5/SVA/2023-2025




# மாலை தந்தி
MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING

மாலை நாளிதழ்




சிவகங்கை | மலர்-3 | இதழ்-348 | 16 டிசம்பர் | ஞாயிற்றுக்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5

## 'ஆதவ் அர்ஜுனாவுக்கு வேறு செயல்திட்டம் இருக்கிறது' விசிக தலைவர் திருமாவளவன் கண்டனம்

திருச்சி, டிச.16

"ஆதவ் அர்ஜுனா இடைநீக்கம் செய்யப்பட்டிருக்கக்கூடிய சூழலில் முரண்பாடான கருத்தை கூறுவது தவறு. ஆறு மாதத்திற்குப் பின்பு கட்சியில் இணைந்து பணியாற்ற வேண்டுமென்றால் அவர் அமைதியாக இருக்க வேண்டும். ஆனால் அவருக்கு வேறு ஒரு செயல் திட்டம் இருப்பதால்தான் இது போன்ற கருத்துக்களை தொடர்ந்து பேசி வருகிறார் என்பதை உணர முடிகிறது. எங்கள் கட்சியின் நடைமுறையின் அடிப்படையில் தான் அவர் நீக்கப்பட்டுள்ளார்." என்று விசிக தலைவர் தொல்.திருமாவளவன் தெரிவித்துள்ளார்.



கும்பகோணத்தில் நடைபெற உள்ள விடுதலை சிறுத்தைகள் கட்சி நிர்வாகி இல்ல திருமணத்தில் பங்கேற்பதற்காக செல்லும் வழியில் சென்னையிலிருந்து விமானம் மூலம் திருச்சிக்கு வருகை தந்த விடுதலை சிறுத்தைகள் கட்சியின் தலைவர் தொல்.திருமாவளவன் திருச்சி விமான நிலையத்தில் செய்தியாளர்களை சந்தித்தார்.

அப்போது அவர் கூறியதாவது: அரசமைப்பு சட்டத்தையும், அம்பேத்கரையும் போற்றி, புகழ்ந்து கொண்டே அரசமைப்பு சட்டம் மீது மூர்க்கமான தாக்குதலை பாஜக அரசு நடத்தி வருகிறது. ஏற்கனவே 375 வது சட்டப்பிரிவைக் கொண்டு வந்து அரசமைப்பு சட்டத்துக்கு எதிராக தாக்குதல் நடத்தினார்கள், முன்னேறிய வகுப்பைச் சேர்ந்த பொருளாதாரத்தில் நலிந்தவர்களுக்கு இடஒதுக்கீடு சட்டத்தை கொண்டு வந்தார்கள். 370 வது சட்டப்பிரிவை நீக்கினார்கள். சிஏஏ சட்டத்தை கொண்டு வந்தார்கள். இதெல்லாம் அரசமைப்பு சட்டத்துக்கு எதிரானது.

வழிபாட்டு தளங்களுக்கான சட்டம் 1948 கொண்டு வந்து சட்டத்தை பொருட்படுத்தாமல் அதனை அவமதிக்கும் வகையில் நீதிமன்றம் வழியாக ராமர் கோயிலை கட்டி முடித்தனர், எனவே, தேசிய அளவில் ஜனநாயக சக்திகள் ஒன்றிணைந்து இந்த ஆபத்தை தடுக்க அணி திரள வேண்டும். இது குறித்த விவாதத்தில் நாடாளுமன்றத்தில் கருத்துக்களை பதிவு செய்ய நான் முயன்ற போது என்னை அனுமதிக்கவில்லை.

ரூ.5000 நிதியுதவி.. தமிழ்நாடு அரசு ரூ.2,475 கோடி வெள்ள நிவாரணமாக கேட்டதற்கு மத்திய அரசு 944.80 கோடியை கொடுத்துள்ளனர். தமிழகத்துக்கு தேவையான நிதியை மத்திய அரசு வழங்க வேண்டும். வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு ரூ.5000 நிதி உதவி வழங்க வேண்டும் என விடுதலை சிறுத்தை கட்சி சார்பில் தொடர்ந்து கோரிக்கை வைத்து வருகிறோம்.

அரசியலுக்காக தான் கூட்டணி கட்சிகளை திமுக பயன்படுத்துகிறது என்கிற தமிழக வாழ்வுரிமை கட்சித் தலைவர் வேல்முருகனின் விமர்சனத்தில் எனக்கு உடன்பாடு இல்லை.

ஒரே நாடு ஒரே தேர்தல் திட்டம் ஆபத்தானது: அரசமைப்பு சட்டத்துக்கு எதிராக ஒரே நாடு ஒரே தேர்தல் திட்டத்தை கொண்டு வரப் பார்க்கிறார்கள். அமெரிக்காவில் இருப்பதைப் போன்ற நிலையை இங்கு கொண்டு வர வேண்டும் என்று விரும்புகின்றனர். இத்திட்டத்தால் கூட்டணி கட்சிகளின் தயவே இல்லாமல் அவர்கள் ஆட்சி அமைக்கலாம். எதிர்க்கட்சிகள் யாரும் ஆளும்கட்சியை கேள்வி கேட்க முடியாது. இது மிகவும் ஆபத்தானது. ஜனநாயகத்துக்கு, அரசமைப்புச் சட்டத்துக்கு எதிரானது.

ஆதவ் அர்ஜுனுக்கு கண்டனம்: அம்பேத்கர் புத்தக வெளியீட்டு விழாவில் நான் பங்கேற்காதது குறித்து ஏற்கனவே கருத்து தெரிவித்து விட்டேன். என்னை யாரும் அழுத்தம் கொடுத்து இணங்க வைக்க முடியாது. சில நேரங்களில் முதல்வரை பார்க்க முடியாத தருணங்களில் மற்ற அமைச்சர்களை பார்த்து பேசுவது உண்டு. அப்படித்தான் நான் அமைச்சர் எ.வ. வேலுவை சந்தித்தேன்.

நீ இடைநீக்கம் செய்யப்பட்டிருக்கக்கூடிய சூழலில் முரண்பாடான கருத்தை கூறுவது தவறு. ஆறு மாதத்திற்குப் பின்பு கட்சியில் இணைந்து பணியாற்ற வேண்டுமென்றால் அவர் அமைதியாக இருக்க வேண்டும். ஆனால் அவருக்கு வேறு ஒரு செயல் திட்டம் இருப்பதால்தான் இது போன்ற கருத்துக்களை தொடர்ந்து பேசி வருகிறார் என்பதை உணர முடிகிறது. எங்கள் கட்சியின் நடைமுறையின் அடிப்படையில் தான் அவர் நீக்கப்பட்டுள்ளார். இவ்வாறு அவர் தெரிவித்தார்.

இந்த நிலையில் விசிகவிலிருந்து விலகுவதாக ஆதவ் அர்ஜுனா ராஜினாமா கடிதம் அளித்துள்ளார்.

முக்கியபிரச்சனைகளிலிருந்து விலகி, யாரை எதிர்க்க வேண்டுமோ அவர்களை எதிர்க்காமல் கட்சியின் அடிப்படை சித்தாந்தத்தையே கேள்விக்கு உள்ளாக்கும் இதுபோன்ற நபர்கள் பலர் அனைத்து கட்சிகளிலும் இருக்கத்தான் செய்கிறார்கள். அவர்களின் நோக்கம் நிறைவேறாத பட்சத்தில் கட்சியிலிருந்து வெளியே வந்து விடுகிறார்கள்.

## பட்டதாரி ஆசிரியர்களின் எண்ணிக்கையை 8 ஆயிரமாக உயர்த்த வேண்டும்: அரசுக்கு ராமதாஸ் வலியுறுத்தல்

சென்னை, டிச.16

பிப்ரவரி 4ஆம் தேதி நடத்தப்பட்ட போட்டித் தேர்வுகளின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படவுள்ள பட்டதாரி ஆசிரியர்களின் எண்ணிக்கையை 8 ஆயிரமாக உயர்த்த வேண்டும். அவர்களுக்கு புத்தாண்டுக்குள் பணி நியமன ஆணைகளை அரசு வழங்க வேண்டும் என பாமக நிறுவனர் ராமதாஸ் வலியுறுத்தியுள்ளார்.



இது குறித்து அவர் வெளியிட்டிருக்கும் அறிக்கையில், "தமிழ்நாட்டில் அரசு பள்ளிகளில் நியமிக்கப்படுவதற்காக 3,192 பட்டதாரி ஆசிரியர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு 5 மாதங்களாகியும் அவர்களுக்கு இன்னும் பணி நியமன ஆணைகள் வழங்கப்படவில்லை. அரசு பள்ளிகளில் காலியிடங்களின் எண்ணிக்கை அளவுக்கு அதிகமாக இருப்ப தால், பணி நியமனம் செய்யப்படும் ஆசிரியர்களின் எண்ணிக் கையை அதிகரிக்க வேண்டும் என்று கோரிக்கைகள் எழுந் துள்ள நிலையில், அறிவிக்கப்பட்ட பணியிடங்களின் எண்ணிக்கையை குறைக்க தமிழக அரசு முடிவு செய்திருப்பதாக வெளியாகியுள்ள செய்திகள் அதிர்ச்சியளிக்கின்றன.

3,192 பட்டதாரி ஆசிரியர்களை தேர்ந்தெடுப்பதற்கான அறிவிப்பு கடந்த ஆண்டு அக்டோபர் மாதம் 25ம் நாள் வெளியிடப்பட்டது. அதன்படி விண்ணப்பித்தவர்களுக்கு கடந்த பிப்ரவரி 4ம் தேதி போட்டித் தேர்வுகள் நடத்தப்பட்டு, அதன் முடிவுகள் மே மாதம் 18ம் தேதி வெளியிடப்பட்டன. அதைத் தொடர்ந்து ஜூன் மாதத்தில் சான்றிதழ் சரிபார்ப்பு நடத்தப்பட்டு, ஆசிரியர் பணிக்கு தேர்ந்தெடுக்கப்பட்டவர்களின் பட்டியல் ஜூலை 18ம் தேதி வெளியிடப்பட்டது.

அதன்பின் 5 மாதங்களுக்கு மேலாகியும், தேர்ந்தெடுக்கப்பட்ட ஆசிரியர்களுக்கான பணி நியமன ஆணைகள் வழங்கப்படவில்லை. கடந்த மாதம் 8ஆம் தேதி நடைபெற்ற கல்வித்துறை குறித்த ஆய்வுக் கூட்டத்தில் ஆசிரியர்களை நியமிக்க முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அனுமதி அளித்ததாக செய்திகள் வெளிவந்தன.

ஆனால், அதன்பின் 40 நாள்கள் ஆகிவிட்ட நிலையில் பட்டதாரி ஆசிரியர்களை நியமிக்க எந்த நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை. அதுமட்டுமின்றி, 3192 ஆசிரியர்களை தேர்வு செய்ய அறிவிக்கை வெளியிடப்பட்ட நிலையில், அந்த எண்ணிக்கையை 2800 ஆக குறைக்க முயற்சிகள் நடப்பதாக செய்திகள் வருகின்றன. அந்த செய்திகள் சரியானவை என்றால், அவை ஆசிரியர் பணிக்கு தகுதி பெற்ற இளைஞர்களுக்கு இழைக்கப்படும் பெரும் துரோகமாகும்.

தமிழ்நாட்டில் திமுக ஆட்சிக்கு வந்தவுடன் அரசு பள்ளிகளில் காலியாக இருக்கும் ஆசிரியர் பணியிடங்கள் நிரப்பப்பட விருப்பதாகவும், அதுவரைக்கும் தற்காலிக ஏற்பாடாக 5154 பட்டதாரி ஆசிரியர்கள் உள்ளிட்ட 14 ஆயிரத்து 19 ஆசிரியர்கள் பள்ளி மேலாண்மைக் குழுக்கள் மூலம் நியமிக்கப்படுவார்கள் என்று அறிவிக்கப்பட்டது.

15 மாதங்களுக்கு முன் வெளியிடப்பட்ட அறிவிக்கையின்படி தேர்ந்தெடுக்கப்பட்ட பட்டதாரி ஆசிரியர்களுக்கு இன்னும் பணி நியமன ஆணைகள் வழங்கப்படவில்லை. இளைய தலைமுறையினருக்கு கல்வி வழங்க அரசு பள்ளிகளில் ஆசிரியர்கள் நியமிக்கப்பட வேண்டியது அவசியம் ஆகும். ஆனால், நியமனங்களை தள்ளிப் போடுவதன் மூலம் அவர்களுக்கான ஊதியச் செலவை மிச்சப்படுத்தலாம் என்று திட்டமிடுகிறது திராவிட மாடல் அரசு. கல்விச்செலவை மிச்சப்படுத்த நினைக்கும் இந்த அரசு எப்படி மக்கள் நலன் காக்கும் அரசாக இருக்க முடியும்?

இத்தகைய சூழலில் மாணவர்களின் கல்வி பாதிக்கப்படுவதைத் தடுக்கும் வகையில், கடந்த பிப்ரவரி 4ஆம் தேதி நடத்தப்பட்ட போட்டித் தேர்வுகளின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்படவுள்ள பட்டதாரி ஆசிரியர்களின் எண்ணிக் கையை 8 ஆயிரமாக உயர்த்த வேண்டும். அவர்களுக்கு புத் தாண்டுக்குள் பணி நியமன ஆணைகளை அரசு வழங்க வேண்டும். என்று தெரிவித்துள்ளார்.

## கண்டனத் தீர்மானங்கள் மூலம் திமுக மீது களங்கம் சுமத்திட இபிஎஸ் முயற்சி: ஆர்.எஸ்.பாரதி பதிலடி

சென்னை: , டிச.16

"நல்லாட்சி வழங்கிவரும் திராவிட மாடல் ஆட்சியின் மீது சில கண்டனத் தீர்மானங்களை நிறைவேற்றி அதன்மூலம் களங்கம் சுமத்திடலாம் எனக் கற்பனைக் கோட்டை கட்டியிருக்கிறார் எடப்பாடி பழனிசாமி" என திமுக அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ். பாரதி விமர்சித்துள்ளார்.





இது குறித்து அவர் வெளியிட்டிருக்கும் அறிக்கையில், "அதிமுக செயற்குழு மற்றும் பொதுக்குழுவில், முதல்வர் ஸ்டாலின் தலைமையிலே நல்லாட்சி வழங்கிவரும் திராவிட மாடல் ஆட்சியின் மீது சில கண்டனத் தீர்மானங்களை நிறைவேற்றி அதன்மூலம் களங்கம் சுமத்திடலாம் எனக் கற்பனைக் கோட்டை கட்டியிருக்கிறார் எடப்பாடி பழனிசாமி.

பொதுக்குழுவைக் கூட்டிவிட்டோமே தீர்மானத்திற்கு என்ன செய்வது, எங்கே போவது, குறையின்றி நடந்துவரும் திமுக அரசு மீது எதைச் சொல்லி பழி போடுவது எனத் தெரியாமல் இட்டுக்கட்டிய பொய்களை எழுதி நிரப்பி கண்டனத் தீர்மானம் எனக் கதை கட்டியிருக்கிறார் 'கட்டுக்கதை' பழனிசாமி.

ஒன்றிய பாஜக அரசோடு கூடிக்குலாவி கூட்டணியில் இருந்த காலத்தில் 15ஆவது நிதி ஆணையம் தெரிவித்த வரி உயர்வைக் கட்டாயமாகக் கடைபிடிக்க வேண்டும் என்ற கட்டளையை, சிரம் ஏற்று 'சரி' என தலையாட்டி தமிழ்நாட்டு மக்களுக்குத் துரோகம் செய்துவிட்டு தற்போது சொத்துவரி பற்றி நீலிகண்ணீர் வடித்து நடித்துள்ளார் சொத்துவரி உயர்வுக்குக் காரணமான பழனிசாமி.

தூத்துக்குடி துப்பாக்கிச் சூடு, சாத்தான்குளம் தந்தை மகன் கொலை, பொள்ளாச்சி பாலியல் வன்கொடுமைகள் எனக் கொலை கொள்ளை பாலியல் குற்றங்கள் பசிபிக் கடலளவு பெருகிக் கிடந்த அலங்கோல ஆட்சி நடத்திய பழனிசாமி தற்போது குற்றங்களை இரும்புக்கரம் கொண்டு ஒடுக்கி மக்களைக் காத்துவரும் திராவிட மாடல் ஆட்சி மீது சுண்டுவிரலை நீட்டிக்கூட பேச தகுதியில்லை.

ஒன்றிய அரசு கொண்டுவந்து நிறைவேற்றிய, ஒன்றிய அரசு தனித்து ஏலம் விடும் அதிகார சட்டத்திருத்தத்தை வாயாரப் புகழ்ந்து, வானளவு வாழ்த்தி நெடுஞ்சாண்கிடையாக விழுந்து ஆதரித்து, தமிழ்நாட்டு மக்களின் உரிமைகளை அடமானம் வைத்துவிட்டு தற்போது அது வெளிப்பட்ட உடன், என்ன செய்வதென்று தெரியாமல் திமுக மீது கண்டனத் தீர்மானம் நிறைவேற்றும் நாடகத்தை நடத்தி உள்ளார்.

டங்ஸ்டன் சுரங்கத்துக்கான அனுமதியைக் கொடுக்க காரணமே அதிமுக ஆட்சிதான். 2019 ஆம் ஆண்டு அதிமுக ஆட்சியில் மதுரை மேலூர் பகுதியில் இரவோடு இரவாக நடத்தப்பட்ட ஆய்வின் அடிப்படையில்தான் அங்கு டங்ஸ்டன் சுரங்கம் அமைக்க ஒன்றிய அரசு முடிவு செய்து ஏலம் விட்டுள்ளது.

தற்போதும் கூட மறைமுகமாக மதவாத பாஜகவோடு கள்ள உறவில் கைகோத்து இருக்கும் பழனிசாமி, ஒன்றிய அரசின் மக்கள் விரோத செயலை கண்டித்து ஒரு வார்த்தை கூட உச்சரிக்கவில்லை; தீர்மானங்களில் கூட பாஜகவுக்கு வலிக்காத வகையில் வலியுறுத்தல் தான். ஆனால் சிறப்பாகச் செயல்பட்டுவரும் தமிழ்நாடு அரசுக்குக் கண்டனமாம். இப்படி கபட வேடம் பூண்டிருக்கும் பழனிசாமி என்றுமே சிறுபான்மை மக்களின் அரணாக நிற்கும் திராவிட மாடல் ஆட்சியை குறை கூறினால் மக்கள் நம்பிவிடுவார்களா என்ன?

நிர்வாகத்திறனற்ற பத்தாண்டுகால அதிமுக ஆட்சியில் நசிவுற்ற அரசு மற்றும் தனியார் தொழில் நிறுவனங்கள் திராவிட மாடல் விடியல் ஆட்சியில் மேம்பட்டிருக்கின்றன. உலக முதலீட்டாளர்கள் மாநாடு நடத்தியதன் மூலமும், முதல்வரே துபாய், சிங்கப்பூர், ஜப்பான், அமெரிக்கா போன்ற நாடுகளுக்கு நேரடியாகச் சென்று முதலீடுகளைத் திரட்டியதன் விளைவாகவும் தமிழ்நாட்டில் பெரும் நிறுவனங்கள் தொழில் தொடங்கி அதன் மூலம் வேலைவாய்ப்புகள் அதிகரித்து வருகின்றன. அதன் காரணமாக இந்தியாவிலேயே அதிக வேலையாப்பினை உருவாக்கி வளர்ச்சிப்பாதையில் முன்னணியில் இருக்கும் மாநிலமாகத் தமிழ்நாடு உயர்ந்துள்ளது.

அதோடு தமிழக முதலவர் பெண்கள் முன்னேற்றத்திற்காக மேற்கொண்ட சீரிய நடவடிக்கைகளால் இன்று பெண்கள் வேலைக்கு செல்லும் விகிதத்திலும், சுயசார்பு நிலையிலும் தமிழ்நாடு தான் இந்தியாவிலேயே முதலாவதாக உள்ளது. அதிமுக ஆட்சியில் இருள் சூழ்ந்து கிடந்த தமிழ்நாடு திராவிட மாடல் நல்லாட்சியில் ஒளிவீசுயபடி வளர்ந்துவருகிறது.

தமிழ்நாட்டு மக்களின் நலனே முக்கியம் என முதல்வர் தலைமையிலே சிறப்பாக நடந்துவரும் திராவிட மாடல் ஆட்சி மீது அள்ளிவிடும் அதிமுகவின் கண்துடைப்பு கண்டனக்கதைகளைத் தமிழ்நாட்டு மக்கள் துளியும் நம்பபோவதல்லை; கட்டுக்கதை பழனிசாமியின் துரோகத்தையும் மறக்கப்போவது இல்லை" எனத் தெரிவித்துள்ளார்.

## இண்டியா கூட்டணி தலைமை பொறுப்பில் காங். தீவிரமாக செயல்பட வேண்டும்: உமர் அப்துல்லா

ஸ்ரீநகர், டிச.16

இண்டியா கூட்டணியின் தலைமை பொறுப்பில் காங்கிரஸ் கட்சி தீவிரமாக செயல்பட வேண்டும் என ஜம்மு காஷ்மீர் முதல்வர் உமர் அப்துல்லா கூறியுள்ளார். ஜம்மு காஷ்மீர் முதல்வராக கடந்த அக்டோபர் மாதம் பொறுப்பேற்ற பின்பு உமர் அப்துல்லா முதல் முறையாக பேட்டியளித்துள்ளார்.

அப்போது அவரிடம் இண்டியா கூட்டணியின் தலைமை குறித்து கேள்வி எழுப்பப்பட்டது. இதற்கு அவர் அளித்த பதிலில் கூறியதாவது: காங்கிரஸ் கட்சிக்கு தேசியளவில் செல்வாக்கு உள்ளது. நாடாளுமன்றத்திலும் மிகப் பெரிய எதிர்க்கட்சியாக உள்ளது. இதன் காரணமாக எதிர்க்கட்சிகள் அடங்கிய இண்டியா கூட்டணியின் தலைமை பதவியில் காங்கிரஸ் உள்ளது. ஆனால், அதன் செயல்பாடு குறித்து கூட்டணி கட்சிகள் கவலைப்படுகின்றன. இண்டியா கூட்டணிக்குள் காங்கிரஸ் கட்சி தீவிரமாக செயல்பட்டு தலைமை பதவியில் இருக்க வேண்டும். தானாக கிடைத்தது என்பதற்காக அந்த பொறுப்பில் இருக்கக் கூடாது.

நாடாளுமன்றத்தில் தனிபெரும் கட்சியாக இருப்பதால், மக்களவையிலும், மாநிலங்களவையில் எதிர்க்கட்சி தலைவர் பதவியில் காங்கிரஸ் உள்ளது. இதற்கு காரணம் காங்கிரஸ் தேசிய கட்சி. இதுபோல் இண்டியா கூட்டணியில் உள்ள எந்த கட்சியையும் கூற முடியாது. அதானல்தான், எதிர்க்கட்சிகளின் கூட்டணிக்கான தலைமை அந்த கட்சிக்கு தானாக கிடைத்தது.

எதிர்க்கட்சிகளின் தலைமை பதவியில் இருக்க காங்கிரஸ் கட்சி போதிய அளவில் உழைக்கவில்லை என கூட்டணி கட்சிகள் சில உணர்கின்றன. இதை சரிசெய்வது குறித்து காங்கிரஸ் கட்சி பரிசீலிக்க வேண்டும்.

இவ்வாறு உமர் அப்துல்லா கூறினார்

## 'டெல்லி சலோ' யாத்திரையை மீண்டும் தொடங்கும் விவசாயிகள்; ஹரியானாவில் இணைய சேவை துண்டிப்பு

சண்டீகர், டிச.16

விவசாய பயிர்களுக்கு குறைந்தபட்ச ஆதரவு விலை உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை வலியுறுத்தி விவசாயிகள் தங்களின் டெல்லி நோக்கி 101 பேர் செல்லும் ஜோடி யாத்திரையை இன்று மதியம் மீண்டும் தொடங்குகின்றனர். இதனை முன்னிட்டு ஹரியானா அரசு அம்மாநிலத்தின் அம்பலா மாவட்டத்தின் 12 கிராமங்களில் டிசம்பர் 17ம் தேதி வரை இணைய சேவை, மொத்தமாக குறுஞ்செய்தி அனுப்பும் சேவையை தடைசெய்துள்ளது.



கிஷான் மஸ்தூர் மோர்சா (கேஎம்எம்) தலைவர் சர்வான் சிங் பந்தேர், சனிக்கிழமை விவசாயிகள் குழு டெல்லி நோக்கிச் செல்லும் என்று தெரிவித்திருந்தார். டிசம்பர் 6ம் தேதியில் இருந்து தலைநகர் டெல்லி நோக்கி பேரணி செல்வதற்கு விவசாயிகள் மேற்கொள்ளும் மூன்றாவது முயற்சி இதுவாகும். முன்னதாக டிசம்பர் 6 மற்றும் 8ம் தேதி என இரண்டு முறை விவசாயிகள் டெல்லி செல்ல முயன்றனர். என்றாலும் அவர்கள் ஹரியானா போலீஸாரால் தடுத்து நிறுத்தப்பட்டு பேரணி செல்ல அனுமதிக்கப்படவில்லை.

டெல்லி நோக்கி செல்லும் விவசாயிகளை தடுத்துநிறுத்துவதற்காக ஹரியானா எல்லையில் அம்மாநில போலீஸார் பல அடுக்கு தடுப்புகளை ஏற்படுத்தியுள்ளனர். இதனிடையே, ஹரியானா மாநில கூடுதல் தலைமைச் செயலாளர் (உள்துறை), பொது அமைதியைக் காக்கும் படிக்கு, இணைய சேவை மற்றும் மொத்த மாக குறுஞ்செய்தி அனுப்பும் சேவைகளுக்கு தடைவிதிக்கப்பட்டுள்ளது. அம்பலா மாவட்டத்தில் ஏற்கெனவே பாரதீய நாகரிக் சுரக்ஷா சன்ஹிதா பிரிவு 163ன் படி தடையுத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இதன்படி ஐந்து பேர் அல்லது அதற்கு மேல் குழு வாக கூடுவது தடைசெய்யப் பட்டுள்ளது.

டெல்லி நிர்வாகத்திடம் அனுமதி பெற்ற பின்பு விவசாயிகள் டெல்லி நோக்கி பேரணியாக செல்லாம் என்று ஹரியானா போலீஸார் ஏற்கனவே தெரிவித்துள்ளனர்.

சம்யுக்தா கிஷான் மோர்சா (அரசியலற்றது) மற்றும் கேஎம்எம் போன்ற விவசாய அமைப்புகளின் தலைமையின் கீழ், பயிர்களுக்கு குறைந்த பட்ச ஆதரவு விலைக்கு சட்டப்பூர்வ அங்கீகாரம் உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து போராடி வருகின்றன. மேலும் மத்திய அரசு இதுதொடர்பாக மத்திய அரசு தங்களுடன் பேச்சு வார்த்தை நடத்த வேண்டும் என்று வலியுறுத்துகின்றனர்.

இதனிடையே கனவுரி எல்லைக்கு அருகே சாகும் வரை உண்ணாவிரதம் இருந்து வரும் விவசாயத் தலைவர் ஜக்ஜித் சிங் தல்லாவாலின் உண்ணாவிரதம் இன்று 19வது நாளை எட்டியுள்ளது. நீண்ட நாட்களாக உண்ணாவிரதம் இருந்துவருவதால் அவரின் உடல்பலவீனமடைந்துள்ளதால் மருத்துவமனையில் அவர் அனுமதிக்கப்பட வேண்டம் என மருத்துவர்கள் ஏற்கெனவே தெரிவித்துள்ளனர்.

என்றாலும் போராட்டத்தில் ஈடுபட்டுவரும் விவசாயிகள் தல்லாவாலினைச் சுற்றி பாதுகாப்பு வளையம் போல் அமைத்துள்ளதால், மாநில அதிகாரிகளால் அவரை நெருங்கி அங்கிருந்து வெளியேற்ற முடியவில்லை. முன்னதாக அவர் உண்ணாவிரதம் தொடங்குவதற்கு சில மணி நேரங்களுக்கு முன்னர், நவம்பர் 26ம் தேதி அவரை போலீஸார் போராட்டம் நடக்கும் இடத்தில் இருந்து வெளியேற்றியுள்ளனர்.

தங்களின் கோரிக்கைகளை வலியுறுத்தி டெல்லி நோக்கி பேரணி சென்ற விவசாயிகள் பஞ்சாப் மற்றும் ஹரியானா மாநில எல்லைகளான ஷம்பு மற்றும் கனவுரி ஆகிய இடங்களில் தடுத்து நிறுத்தப்பட்டதைத் தொடர்ந்து பிப்ரவரி 13ம் தேதி முதல் விவசாயிகள் அங்கு முகாமிட்டு போராடி வருகின்றனர்.



மதுரை மாவட்ட தேசிய சட்டப் பணிகள் ஆணைக்குழு உத்தரவுபடி தேசிய மக்கள் நீதிமன்றம் லோக் அதாலத் வாடிப்பட்டி உரிமையியல் மற்றும் குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தில் நடந்தது. இந்த வழக்குகளை வாடிப்பட்டி நீதிமன்ற நீதிபதிகள் ராம்கிஷோர் செல்லையா ஆகியோர் விசாரணை செய்தார். இதில் உரிமைகள் வழக்குகள், வாடகை பிரச்சினை, கொடுக்கல் வாங்கல், குடும்ப பிரச்சினை, குற்றவியல் வழக்குகள், மோட்டார் வாகன விபத்து, நஷ்ட ஈடு வழக்கு, வங்கி கடன்,காசோலை மோசடி வழக்கு உள்ளிட்ட வழக்குகளை விசாரணை செய்து அபராத தொகை ரூ.1 கோடி 45 லட்சத்து 49ஆயிரத்து155 பெறப்பட்டது.



தேனி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அவர்களின் உத்தரன்படி புத்தாண்டு கிறிஸ்துமஸ் பண்டிகை முன்னிட்டு எந்த ஒரு அசம்பாவிதம் நடந்து விடாத வண்ணம் தேவாரம் காவல்துறையினர் தீவிர ரோந்து பணியில் ஈடுபட்டு வருகின்றன தேவாரம் சார்பு ஆய்வாளர் மற்றும் காவல் துறையினர் இரண்டு சக்கர வாகனம் 4 சக்கர வாகனங்களில் ரோந்து பணியில் ஈடுபட்டு வருகின்றனர். தேவாரம் காவல் நிலையத்திற்கு உட்பட்ட பல்வேறு பகுதிகளில் இரண்டு சக்கர வாகனங்களிலும் இரவு நேரத்திலும் ரோந்து பணியில் ஈடுபட்டு குற்ற சம்பவங்களை தடுக்கும் விதமாக துப்பாக்கியுடன் ஈடுபட்டு வருகின்றனர்



தென்காசி மாவட்ட வழக்கறிஞர் முத்துக் குமார் ஆலோசனையின் படி தென்காசி தெற்கு மாவட்ட மகளிர் அணி சட்டமன்ற தொகுதி அலுவலக திறப்பு விழா நடந்தது . விழாவில் கலந்து கொண்ட தருணம் கலந்து கொண்டவர்கள் மாவட்ட நிர்வாகி தாமரைக்கண்ணன் (எ) அலெக்ஸ்,'வேலு கிருஷ்ணன் ' காவூர்எஸ் ' நடராஜன்மகளிர் அணி தலைவி முத்து செல்வியும் மற்றும் மாவட்ட நிர்வாகிகள் இசக்கி இசக்கித்துரை சேகர்தொகுதி பொறுப்பாளர்கள் சிறப்பான வரவேற்பு கொடுத்தனர்.

# தெற்கு மேட்டில் தவெக சார்பில் நலதிட்ட உதவிகள் வழங்கல்

தென்காசி, டிச : 16

தென்காசிமாவட்டம்புளியறை அருகே தெற்குமேட்டில் தென்காசி தெற்கு மாவட்ட தமிழக வெற்றி கழகம் சார்பில் உறுப்பினர் அட்டை வழங்கும் நிகழ்ச்சி மற்றும் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா தமிழக வெற்றிக் கழக தலைவர் விஜய் ஆணையின்படியும் மாநில பொதுச் செயலாளர் புஸ்ஸி ஆனந்த் அறிவுறுத்தலின்படியும் நடைபெற்றது.

புளியரை அருகே தெற்கு மேட்டில் நடைபெற்ற நிகழ்ச்சியில் தமிழக வெற்றிக் கழக நிர்வாகி டி.பி.வி.வி. விபின் சக்கரவர்த்தி தலைமையேற்று நலத்திட்ட உதவிகளையும் உறுப்பினர் அடையாள அட்டைகளையும் வழங்கினார்.

தெற்குமேட்டில் நடந்த நலத்திட்ட உதவிகள் வழங்கும் நிகழ்ச்சியை தமிழக வெற்றிக் கழக நிர்வாகி முத்துக்குமரன், விஷால், அய்யாதுரை, யோனாக், நண்பன் ராஜ் ஏற்பாடு செய்திருந்தனர்.



நிகழ்ச்சியில் தென்காசி தெற்கு மாவட்ட தமிழக வெற்றிக் கழக நிர்வாகிகள் சிவா, முகம்மது கான், மாரியப்பன், கீழப்பாவூர் சரவணன், இமானுவேல், பத்மநாபன், ரமேஷ், கணேசன், கார்த்தி, லட்சுமி காந்த் பாபு, மேலகரம் மாதவராஜ், சந்துரு, ஸ்ரீ இசக்கி, உள்ளிட்ட தமிழக வெற்றிக்கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



நெல்லை மாவட்டத்தில் கடந்த இரண்டு தினங்களாக பெய்த கனமழை தற்பொழுது முடிவுக்கு வந்துள்ளது. மழையின் தீவிரம் குறைந்துள்ளதால் தூய்மைப் பணிகளை மாநகராட்சி நிர்வாகம் முடிக்கி விட்டுள்ளது. இந்நிலையில் நேற்று காலை மேலப்பாளையத்தில் நடந்த தூய்மைப் பணிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் கார்த்திகேயன் ஆய்வு செய்தார். ஆய்வின்போது நெல்லை மேயர் ராமகிருஷ்ணன் மற்றும் பாளையங்கோட்டை சட்டமன்ற உறுப்பினர் அப்துல் வகாப் உட்பட பலர் இருந்தனர்.


# கொடைக்கானலில் பெய்த தொடர் மழையின் எதிரொலி அடுக்கம் பிரதான மலைச்சாலையில் மண் சரிவு

கொடைக்கானல், டிச.16

திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானல் மலைப்பகுதியில் கடந்த 3 தினங்களாக பெய்த தொடர் மழையால் ஆங்காங்கே பிரதான சாலைகளில் மண் சரிவு ஏற்பட்டதுடன் மரங்களும் முறிந்து விழுந்தன,

இந்நிலையில் கொடைக் கானல் பெருமாள்மலை பகுதியில் இருந்து அடுக்கம் வழியாக தேனி மாவட்டம் பெரியகுளம் பகுதிக்கு செல்லக் கூடிய பிரதான சாலையில் கடந்த 3 தினங்களாக தொடர்ந்து 5க்கும் மேற்பட்ட இடங்களில் மண் சரிவு ஏற்பட்டதுடன்





ராட்சத பாறைகளும் உருண்டு சாலையில் விழுந்து கிடந்தது, மேலும் மரங்களும் முறிந்து சாலையில் விழுந்தது.

இதனையடுத்து நெடுஞ் சாலை துறையினர் கடந்த 3 தினங்களாக அங்கேயே முகாமிட்டு ஜேசிபி வாகனம் மூலம் மண் சரிவினை அகற்றும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

மேலும் கடந்த வெள்ளிக் கிழமை முதல் இன்று வரை மாவட்ட நிர்வாகம் இந்த சாலையை பொதுமக்கள், சுற்றுலாப்பயணிகள் பயன் படுத்த கூடாது என்று தெரி வித்து இருந்த நிலையில் இந்த பகுதியில் வாகனங்கள் வரத்து இல்லாமல் இருந்ததால் போக்குவரத்து பாதிப்பு ஏற்படாமல் இருந்தது, இதனை யடுத்து நாளை முதல் இந்த சாலையை பொதுமக்கள் மற்றும் சுற்றுலாப்பயணிகள் பொதுபோக்குவரத்திற்கு பயன் படுத்த உள்ளதால் நெடுஞ் சாலைதுறை பணியாளர்கள் சீரமைக்கும் பணியில் தீவிரம் காட்டி வருகின்றனர்.

# ஈவிகேஎஸ்.இளங்கோவன் மறைவுக்கு தமிழக உழவர் உழைப்பாளர் கட்சி இரங்கல்

வத்தலகுண்டு டிச.16

திண்டுக்கல் மாவட்டம், வத்தலக்குண்டு வருகை தந்த தமிழக உழவர் உழைப்பாளர் கட்சியின், மாநில தலைவர் வேல்முருகன் ஈவிகேஎஸ்.இளங்கோவன் மறைவுக்கு இரங்கலை தெரிவித்துக்கொண்டார். அவர் கூறும் போது மறைந்த தமிழக முன்னாள் காங்கிரஸ் தலைவர் ஈவிகேஎஸ்.இளங்கோவன் மறைவு செய்தி கேட்டு அதிர்சசி அடைந்துள்ளேன். ஈரோடு கிழக்கு தேர்தலிலும், கொபிசெட்டிபாளையம் நாடாளுமன்ற தொகுதியிலும், இளங்கோவன் அவர்களுக்கு தமிழக உழவர் உழைப்பாளர் கட்சியின் சார்பில் தேர்தல் பணியாற்றிய பொது எங்கள் கட்சி தொண்டர்களை அன்புடன் வழிநடத்திய தலைவர் ஈவிகேஎஸ். இளங்கோவன் ஆவார்கள். கோபிசெட்டிபாளையத்தில் பாராளுமன்ற உறுப்பினராக தேர்ந்தெடுத்த போது மன்மோகன் சிங் பிரதமராக இருந்த போது மத்திய ஜவுளித்துறை அமைச்சராக



பணியாற்றினார். அப்போது தான் திருப்பூர் பின்லாடைகள் பயன்படுத்தும் நூல்களில் சாயக்கழிவுகளினால் அங்குள்ள விவசாயிகள் பசுமை தீர்பாயம் மூலம் 800 கோடி இழப்பீடு கேட்டு தீர்பாயம் வழங்க வேண்டும் என உத்திரவிட்டுள்ளது. இதன் காரணமாக திருப்பூரில் பின்னலாடை தொழில் பணிபுரிந்த 50 ஆயிரம் பேர் வேலையிழக்கும் அபாயம் வந்த போது அந்த நிலையில் பிரதமர் மன்மோகன் சிங் மற்றும் காங்கிரஸ் கமிட்டி தலைவர் சோனியா காந்தி அவர்களிடமும் ஈவிகேஎஸ். இளங்கோவன் நேரிடையாக பேசி பசுமை தீர்ப்பாயம் விதித்த அபதாரத்தை மத்திய அரசு செலுத்தியது. இதற்கு முக்கிய காரணம் ஈவிகேஎஸ். இளங்கோவன் என்பது மறக்க முடியாது. விவசாயிகளின் உற்ற தோழனாகவும், சிறு தொழிலாளர்களின் வாழ்கையில் ஒளியேற்றியவர் ஈவிகேஎஸ்.இளங்கோவன் மறைவுக்கு அவரது மறைவு ஒரு பேரிழப்பாகும். ஆகவே ஈவிகேஎஸ்.இளங்கோவனை இழந்து வாடும் அவரது குடும்த்தினருக்கும், காங்கிரஸ் பேரியக்கத்தின் நிர்வாகிகள் தொண்டர்களுக்கும் ஆழந்த வருத்தத்தையும் இரங்கலையும் தெரிவத்துக்கொள்கின்றேன். என தெரிவித்தார்.

# நெல்லை மாவட்ட மக்களுக்கு மாவட்ட ஆட்சித் தலைவர் அறிவிப்பு

நெல்லை டிச16

நெல்லை மாவட்டத்தில் கடந்த இரண்டு நாட்களாக கனமழை பெய்து வந்ததால் நெல்லை தாமிரபரணியில் ஏற்பட்ட வெள்ளம் காரணமாக ஆற்றில் உறைகிணறுகளில் மண் சேர்ந்துள்ளதாலும் சில இடங்களில் மின்மோட்டார்கள் பைப்புகள் மற்றும் வயர்கள் சேதம் அடைந்துள்ளதாலும் அவற்றை சீரமைக்கும் பணி போர்க்கால அடிப்படையில் சிறப்பு குழுக்கள் மூலம் நடைபெற்று வருகிறது.



பல்வேறு இடங்களில் முன்னெச்சரிக்கையாக முன்கூட்டியே மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளில் ஏற்றி வைக்கப்பட்டிருந்த குடிநீர் இன்று வரை வழங்கப்பட்டுள்ளது.

சீரமைப்பு பணிகள் முடிந்து படிப்படியாக குடிநீர் விநியோகம் சரி செய்யப்பட்டு வருகிறது ஒரு சில இடங்களில் மட்டும் குடிநீர் வழங்க ஓரிரு நாட்கள் கூடுதலாக தேவைப்படலாம்.

அது போன்ற பகுதிகளில் போர்வெல்கள் மூலமும் தேவைப்பட்டால் லாரிகள் மூலமும் குடிநீர் வழங்க ஏற்பாடு செய்யப்படுகிறது. பொதுமக்கள் குடிநீரை சிக்கனமாக பயன்படுத்தி ஒத்துழைப்பு வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறது. பொதுமக்கள் குடிநீரை கட்டாயம் காய்ச்சி ஆற வைத்து பருகிடவும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.

குடிநீர் தொடர்பாக புகார்கள் ஏதும் இருப்பின், பொதுமக்கள் 9786566111 என்ற எண்ணில் தொடர்பு கொண்டு புகார் தெரிவிக்கலாம். என்று திருநெல்வேலி மாவட்ட ஆட்சித் தலைவர் கார்த்திகேயன் தெரிவித்துள்ளார்.

# மழையில் அடித்துச் செல்லப்பட்ட கொடைக்கானல் கீழானவயல் சாலை விரைவில் சீர்செய்து தரக்கோரி கிராம மக்கள் கோரிக்கை

கொடைக்கானல், டிச.16

கொடைக்கானலில் கடைகோடி கிராமமாக உள்ள கீழானவயல் கிராமத்திற்கு செல்ல கூடிய சாலையில் நீர்த்தேக்கம் கரை உடைந்து தண்ணீர் வெளியேறி சாலையில் அடித்து சென்றதில் பாலம் உடைப்பு ஏற்பட்டு சாலை துண்டிக்கப்பட்டு,போக்குவரத்து முடங்கியுள்ளது. விரைவில் சாலை அமைத்து தரக்கோரி கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

திண்டுக்கல் மாவட்டம் கொடைக்கானல் மலைப்பகுதியில் கடந்த 3 தினங்களாக இடைவிடாமல் கன மழை மற்றும் மிதமான மழை பெய்து வந்தது, இதன் காரணமாக நீரோடைகள்,நீர்த்தேக்கங்கள் நிரம்பின, இந்நிலையில்




கொடைக்கானலில் மேல்மலை கிராமங்களில் ஒன்றாக உள்ள மன்னவனூர் ஊராட்சிக்கு உட்பட்ட கடைகோடி கிராமமாக உள்ள கீழானவயல் கிராமத்தில் சுமார் 100க்கும் மேற்பட்ட குடும்பங்கள் வசித்து வருகின்றனர், இங்கு முக்கிய தொழிலாக விவசாயம் மட்டும் செய்யப்படுகிறது, இங்கு விவசாயம் செய்வதற்கு புலி பிடித்தான் கானல் நீர்தேக்கத்தில் இருந்து தண்ணீர் பயன் படுத்தப்படுகிறது.

இந்நிலையில் கடந்த 3 தினங்களாக பெய்த மழையினால் இந்த புலி பிடித்தான் கானல் நீர்த்தேக்கம் நிரம்பி கரை உடைந்து நேற்று கீழான வயல் பகுதிக்கு செல்லக்கூடிய சாலையில் நீர்தேக்க தண்ணீரானது காட்டாற்று வெள்ளம் போல்பாய்ந்துபாலம் உடைந்து சாலை துண்டிப்பு ஏற்பட்டுள்ளது, மேலும் இந்த காட்டாற்று வெள்ளத்தில் ராட்சத மரங்கள் உள்ளிட்டவைகள் அடித்து வரப்பட்டு மிகப்பெரிய ஆறு போல் உருவாகியுள்ளது,இதன் காரணமாக கீழான வயல் கிராம மக்கள் அத்தியாவசிய தேவைக்கு கூட வாகனங்களில் வெளியே வர முடியாமல் கிராமத்திலேயே முடங்கியுள்ளனர்.

மேலும் சேதம் அடைந்த பாலத்தில் ஆபத்தான முறையிலும் கடந்து வருகின்றனர், மேலும் விளைவித்த பொருட்கள் கூட சந்தைக்கு கொண்டுசெல்ல முடியவில்லை என்றும் பால், குடி தண்ணீர் உள்ளிட்ட அத்தியாவசிய பொருட்கள்கிடைக்கதட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதாகவும், கடந்த ஒரு வார காலமாக மின்சாரம் தடை ஏற்பட்டு இருப்பதாக வருத்தம் தெரிவிக்கின்றனர், இதனை மாவட்ட நிர்வாகம் கவனம் செலுத்தி போர்கால அடிப்படையில் இந்த சாலை மற்றும் பாலத்தை சீரமைப்பதுடன்,புலி பிடித்தான் கானல் நீர்த்தேக்கத்தை துரிதமாக சீரமைக்க வேண்டும் என கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

மேலும் கீழானவயல் கிராமமானது கொடைக் கானலில் இருந்து 50 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளதும் குறிப்பிடத்தக்கது

# தென்காசியில் அச்சன்கோவில் ஐயப்பன் திரு ஆபரண பெட்டிக்கு வரவேற்பு



தென்காசி, டிச : 16

தமிழகத்தில் முருகப் பெருமானின் அறுபடை வீடுகளை போன்று ஐயப் பனுக்கு கேரளாவில் ஐந்து படை வீடுகள் உள்ளன. இவற்றில் சபரிமலைக்கு அடுத்தபடியாக ஆரியங்காவு, குளத்துப்புழா, அச்சன் கோவில் ஆகியவை சிறப்பு பெற்ற தலங்களாகும்

இதில் அச்சன்கோவில் தமிழகத்தின் எல்லைக்கு அருகில் அமைந்துள்ள தலமாகும். ஆண்டுதோறும் அச்சன்கோவிலில் டிசம்பர் மாதம் திருஆராட்டு மஹோற் சவதிருவிழா மொத்தம் பத்து நாட்கள் நடைபெறுகிறது.

திருஆராட்டு மஹோற்சவ திருவிழாவை முன்னிட்டு அச்சன்கோவில் ஐயப்பனுக்கு அணிவிப்பதற்காக வைரம் மற்றும் விலை உயர்ந்த முத்துக்களால் செய்யப் பட்டுள்ள தங்க கிரீடம், முகம், மார்பு, கைகள், கால்கள், உடல் கவசம் மற்றும் வாள் உள்ளிட்ட ஆபரணங்கள் புனலூர் அரசு கருவூலத்திலிருந்து ஒவ்வொரு ஆண்டும் அச்சன்கோவிலுக்கு புனலூரில் இருந்து ஆரியங்காவு, புளியரை, செங்கோட்டை, தென்காசி வழியாக கொண்டு செல்லப்படும்.

இந்த ஆண்டும் நடைபெறும் ஆராட்டு மஹோற்சவ திருவிழாவை முன்னிட்டு புனலூர் அரசு கருவூலத்தில் இருந்து எடுத்துவரப்பட்ட ஐயப்பனின் திருஆபரணப் பெட்டிக்கு நேற்று தென்காசி காசி விசுவநாதர் கோவில் வாசலில் வைத்து சிறப்பான வரவேற்பு அளிக்கப்பட்டது

திரு ஆபரண பெட்டி வரவேற்பு கமிட்டி தலைவர் ஏ சி எஸ் ஹரிஹரன் தலைமையிலும் தென்காசி ஐயப்ப சேவா சங்க தலைவர் அழகிரி முன்னிலையிலும் திருஆபரண பெட்டிக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது.

அச்சன்கோவில் திரு ஆபரண பெட்டி வரவேற்பு கமிட்டி செயலாளர் மாடசாமி ஜோதிடர், பொருளாளர் கண்ணன், கௌரவ தலைவர் ராஜகோபாலன், கௌரவ ஆலோசகர் நாராயணன், ஆலோசகர்கள் சுப்பராஜ் மாரிமுத்து, துணை தலைவர்கள் திருமலை குமார், ஆனந்த கிருஷ்ணன், துணைச் செயலாளர்கள் மணிசந்திர மோகன், பாலசுப்பிரமணியன் ஆகியோர் நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை செய்து இருந்தனர்.

# பொழிச்சலூர் ஊராட்சியில் தமிழக வெற்றிக் கழகம் சார்பில் கல்வி உதவித்தொகை வழங்கல்

செங்கல்பட்டு டிச16

செங்கல்பட்டு மேற்கு மாவட்டம் பல்லாவரம் சட்டமன்றத் தொகுதிக்கு உட்பட்ட பொழிச்சலூர் ஊராட்சி சார்பில் தமிழக வெற்றிக் கழகம் மாவட்ட தகவல் தொழில்நுட்ப பிரிவு எஸ்.ஜான் ஏற்பாட்டில் வாழ்வாதரம் இழந்து தவிக்கும் குடும்பத்தினற்க்கு ரமேஷ் மற்றும் அனுஜா மகள் கீர்த்தனா அவர்களுக்கு




மேற்படிப்புக்காக கல்வி உதவித்தொகை செங்கல் பட்டு மேற்கு மாவட்டத் தலை வர் மின்னல் வி.குமார் அந்த குடும்பத்திற்கு படிப்பிற்கான கல்வி உதவி தொகை வழங்கப்பட்டது

இந்நிகழ்ச்சியின் மாவட்ட தலைமை தம்பிராஜ், தொகுதி தலைவர் டி.சுறா ரவி, தொகுதி துணைத்தலைவர். பார்த்திபன், மாவட்ட தலைமை மணி ஜெயமோகன், பொழிச்சலூர் பகுதி பொருளாளர் கே.சந்துரு, பொழிச்சலூர் மகளிர் அணி தலைமை துர்க்கேஷ் நந்தினி,

இந்துமதி, வழக்கறிஞர் பிரிவு ரெபேக்கா, வழக்கறிஞர் பிரிவு பிரசாத் குமார் பொழிச்சலூர் 10வது வார்டு வினோத்குமார், பிரதீப் குமார், மற்றும் கே.எஸ். ஆர்.சுரேஷ், பொழிச்சலூர் 13வது வார்டு அருண்குமார், பொழிச்சலூர் பகுதி 15வது வார்டு ஜேக்கப், பொழிச்சலூர் 8வது வார்டு ஹர்ஷா, 11வது வார்டு சுந்தர் ஆகியோர் இந்நிகழ்ச்சியில் கலந்து கொண்டு சிறப்பித்தனர்..

# தென்காசி மாவட்டத்தில் காய்ச்சல், சளி இருப்பவர்கள் ஆரம்ப சுகாதார நிலையங்களில் சிகிச்சை பெற அறிவுறுத்தல்

தென்காசி டிச16

தென்காசி மாவட்டத்தில் வடகிழக்கு பருவமழை தொடர்ந்து பெய்து வருகிறது. இதனால் காய்ச்சல், சளி, இருமல் முதலான நோயினால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை அதிகரிக்க வாய்ப்புள்ளது. இதனைத் தடுக்கும் பொருட்டு நடமாடும் மருத்துவமனை மூலம் மருத்துவ முகாம்கள் தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

பொது மக்கள் அனைவரும் குடிநீரை நன்கு காய்ச்சி ஆறவைத்து அருந்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.




மேலும் காய்ச்சல், சளி இருப்பவர்கள் அருகில் உள்ள ஆரம்ப சுகாதார நிலைய மருத்துவமனைகள் மற்றும் அரசு மருத்துவமனைகளை அணுகி தகுந்த சிகிச்சை பெற அறிவுறுத்தப்படுகிறார்கள். பொதுமக்கள் மருத்துவரின் ஆலோசனை இல்லாமல் நேரடியாக மருந்துக் கடைகளில் மாத்திரைகள் வாங்கி சாப்பிட வேண்டாம் என்று கேட்டுக்கொள்ளப்படுகிறது. காய்ச்சல், சளி, இருமல் உள்ளவர்கள் முகக்கவசம் அணிய அறிவுறுத்தப்படுகி றார்கள்.

மேலும், டெங்கு காய்ச்சலை தடுக்க மழைநீர் மற்றும் நீர் சேமித்துவைக்கும் பாத்திரங் களில் கொசு புகாதவாறு மூடிவைக்கவும், வீட்டின் சுற்றுப் புறங்களில் உள்ள உபயோக மற்ற பொருட்களை மழை நீர் விழாத இடங்களில் சேகரித்து வைக்கவும், உபயோகமற்ற பொருட்களை அவ்வப்போது அப்புறப்படுத்தவும் கேட்டுக்கொள்ளப்படுகிறது.


எலி காய்ச்சலால், மஞ்சள் காமாலை நோய் ஏற்படலாம். ஆகவே மஞ்சள்காமாலை நோய் அறிகுறிகள் காணப்படும் நபர்கள், ஆரம்ப சுகாதார நிலையங்கள் மற்றும் அரசு மருத்துவமனைகளில் உள்ள பரிசோதனை வசதிகளை பயன்படுத்தி முறையான சிகிச்சை பெற்றுக்கொள்ள வேண்டும் என மாவட்ட ஆட்சியர் ஏ.கே.கமல்கிஷோர் தெரிவித்துள்ளார்.

# மதுரையில் பாகுபலி, ரிநிதி படப்பாணியில் ராஜமரியாதையோடு நடைபெற்ற “சர்வதேச வாசவி கிளப்” நிர்வாக இயக்குனரின் பணி நிறைவு விழா

மதுரை, டிச.16

மதுரை தமுக்கம் மைதான கூட்டரங்கில் வைத்து சர்வதேச வாசவி கிளப் ன் 2024ம் ஆண்டு கவர்னராக ரவிச்சந்திரனின் பொறுப்பேற்று இன்று பணி நிறைவு விழா நடைப்பெற்றது.

அனைத்து வைசியர் சமூகத் தையும் ஒரு பொதுவான தளத்திற்கு கொண்டுவந்து, அவர்கள் தங்கள் கருத்துக் களையும் கருத்துக்களை பரிமாறிக்கொள்வதற்கும், அன்றைய காலத்தில் ஐஏஎஸ் மற்றும் டாக்டர், பொறியாளர் மற்றும் வக்கீல்களாக உள்ள ஆர்ய வைசியர்களை கவுரவிப்பதற்கும் ஒரு தேவை வலுவாக உணரப்பட்டது.



இதற்காக 1961 ஆம் ஆண்டு அக்டோபர் 1 ஆம் தேதி வாசவி கிளப் 11 உறுப்பினர்களுடன் ஹைதராபாதில் ஸ்தாபகராக மட்டுமின்றி, சுதந்திரப் போராளி யாகவும் கருதப்படக்கூடிய சுதந்திரப் போராட்ட வீரர் மறைந்த ஸ்ரீ கல்வகுந்த்லா சந்திரசேன குப்தா (கே.சி.குப்தா) அவர்களால் தொடங்கப்பட்டது.

தற்போது தமிழ்நாடு, ஆந்திரா, கர்நாடகா உள்ளிட்ட மாநிலங்களை உள்ளடக்கிய ஆர்ய வைஸ்யாவைச் சேர்ந்த 5000ஆயிரத்திற்கும் மேற்பட்ட உறுப்பினர்களை உள்ளடங்கிய கிளப் தான் இன்டர்நேசனல் வாசவி கிளப்.

இந்த கிளப்பில் முதல் முறையாக மதுரையை சேர்ந்த ரவிச்சந்திரன் இந்த சங்கத்தின் 2024ம் ஆண்டு சர்வதேச ஜனாதிபதியாக பதவி ஏற்று ஒரு வருடம் நிறைவு பெற்று இன்று அவருக்கு பணி நிறைவு விழா நடைபெற்றது.

இந்த நிகழ்ச்சியில் தமிழ்நாடு மட்டுமின்றி ஆந்திரா, கார்நாடகா உள்இடட் மாநிலங்களில் இருந்து ஆயிரத்துக்கும் மேற்பட்ட நிர்வாகிகள் குடும்பத்தினருடன் பங்கேற்றனர்.

இந்த விழாவில் விழாவின் நாயகன் ஜனாதிபதியாக உள்ள ரவிச்சந்திரனை பாகுபலி மற்றும் கேஜிஎப் படப்பாணியில் சிம்மாசனத்தில் அமர வைத்து மேளதாளங்கள் முழங்க, ஆட்டம் பாட்டத்துடன் ராஜ மரியாதையோடு நிர்வாகிகள் மேடைக்கு அழைத்து வந்தனர்.

குத்து விளக்கேற்றி விழா துவங்கிய நிலையில் விழா மேடையில் ஏழை மாண வர்களின் கல்வித் தேவையைப் பூர்த்தி செய்யும் நோக்கத்துடன் ரிசிநிதி நிதி உதவி, நோட்டுப் புத்தகங்கள் விநியோகம் செய்யப்பட்டது குறித்தும்

பொருளாதாரத்தில் பின்தங்கிய வாசவியர்களின் குடும்பங்களுக்கு சுயவேலை வாய்ப்புக் கடன் வழங்கியது குறித்தும் பேசினார். தொடர்ந்து பணி நிறைவு பெறும் கவர்னருக்கு ஆளுயர மாலை அணிவித்து பொன்னாடை போர்த்தி கவுரவம் படுத்தினர்.

பணி நிறைவு விழாவை கே ஜி எஃப் மற்றும் பாகுபலி படம்போல் சங்க நிர்வாகிகள் கொண்டாடியது மதுரை மக்களிடையே வியப்படையச் செய்தது.

# திருச்சியில் தமிழ்நாடு திறன் மேம்பாட்டு பணியாளர் சங்கத்தின் சிறப்பு செயற்குழு கூட்டம்




திருச்சி, டிச.16

தமிழ்நாடு திறன் மேம்பாட்டு பணியாளர் சங்கத்தின் சிறப்பு செயற்குழு கூட்டம் திருச்சி மாநகரில் நடைபெற்றது. இக்கூட்டத்திற்கு நா. கணேச பாண்டியன் மாநில தலைவர் அவர்களின் தலைமையில், மாநில பொதுச் செயலாளர் ஆர். அன்பரசு அவர்கள் முன்னிலையிலும் சங்கத்தின் செயல் தலைவர் ஜே.பி.ரவி மற்றும் மண்டல தலைவர்கள், நிறைவேற்றப்பட்டன. மேலும் சங்கத்தின் வளர்ச்சி குறித்தும், சங்க உறுப்பினர்களின் நலன்களை மேம்படுத்துவதை குறித்தும் முக்கிய முடிவுகள் எடுக்கப்பட்டன.

மாநில இணைச் செயலா ரா. டியூக் நன்றி கூறினார்.





மதுரை தொண்டி சாலையில் அப்போலோ மருத்துவமனை சந்திப்பில் சாலை சந்திப்பு மேம்பாலம் கட்டுமான பணி நடைபெற்று வருகிறது. சமீபமாக பிசி பெருங்காயம் முதல் மேலமடை வரை போக்குவரத்து மாற்றம் செய்யப்பட்டு இருந்தது அதனை அடுத்து பாலம் கட்டும் பணிகள் விரைவாக நடைபெற்று வருகிறது. சத்திய பிரகாஷ் தலைமை பொறியாளர் கட்டுமானம் மற்றும் பராமரிப்பு அவர்கள் இன்று மாலை கோரிப்பாளையம் மற்றும் அப்போலோ பாலத்தினை நேரில் ஆய்வு செய்தார். பணிகளை விரைவாக முடிக்க அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார். இந்த ஆய்வின் போது ரமேஷ் கண்காணிப்பு பொறியாளர் மதுரை மோகன் காந்தி கோட்ட பொறியாளர் ஆனந்த் உதவி கோட்ட பொறியாளர் மற்றும் குரு பிரகாஷ் உதவி பொறியாளர் உடன் இருந்தனர்

# வத்தலகுண்டு பேருந்து நிலையத்தில் இருக்கைகளுடன் நிழல் குடை அமைக்க தேமுதிக ஒன்றிய செயலாளர் கோரிக்கை

வத்தலகுண்டு டிச.16

திண்டுக்கல் மாவட்டம் வத்தலக்குண்டு பேருந்து நிலையத்தில் தினசரி 3000க்கும் மேற்பட்ட பயணிகள் வந்து செல்லும் இடமாக வத்தலகுண்டு பேருந்து நிலைய அமைந்துள்ளன இந்த பேருந்து நிலையத்தில் பயணிகள் அமர்வதற்கு சரியான இடம் கிடையாது பஸ் நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள வணிகக் கடைகள் ஆக்கிரமிப்பில் அவர்களுக்கு அமைக்கப்பட்ட இடத்திற்கு முன் உள்ள பிளாட்பாரங்கள் ஆறடி நீளத்திற்கு முன்னாள் வந்துள்ளனர் இதனால் பயணிகள் மழைக்காலங்களில் நிற்கக் கூட முடியாத அளவிற்கு உள்ளன இந்த வத்தலக்குண்டு பஸ் நிலையத்திற்கு திண்டுக்கல் பழனி கொடைக்கானல் மதுரை சென்னை கோயம்புத்தூர்



திருப்பத்தூர் திருப்பூர் திருச்சி தஞ்சாவூர் கும்பகோணம் மற்றும் ராமேஸ்வரம் திருநெல்வேலி கம்பம் பெரியகுளம் நெய்வேலி தூத்துக்குடி பெங்களூர் சென்னை பஸ்கள் வந்து செல்லும் முக்கிய ஊராக உள்ளன குறிப்பாக கொடைக் கானல் ஐயப்பன் கோவில் செல்லும் இதய பகுதியாக உள்ள வத்தலக்குண்டு பஸ் நிலையத்தில் எந்தவித அடிப்படை வசதியும் இல்லா மல் தவித்துக் கொண் டிருக்கிறார்கள்.


தற்சமயம் மழைக்காலங்களில் குழந்தைகளுடன் வரும் பயணிகள் அமர்வதற்கு சரியான இடம் இல்லை பஸ் நிலையம் குண்டும் குழியுமாக காட்சியளிக்கிறது 10 நாட்களுக்கு முன்பு பழுது பார்க்கிறேன் என்ற பெயரில் ஏதோ வேலை செய்து இன்னமும் அப்படியே பள்ளங்கள் உள்ளன மழை காலங்களில் பயன்படுத்த முடியாத நிலையில் பஸ் நிலையம் உள்ளது இதை பொதுமக்கள் முகம் சுளிக்கும் அளவிற்கு பயன்பாட்டில் உள்ளன சாக்கடை கழிவு நீரும் மழை நீரும் பஸ் நிலையத்திற்குள் அதிக அளவில் தங்கி இருப்பதால் துர்நாற்றம் பேசுகின்றன.

குடிக்க தண்ணீர் இல்லை இலவச கழிப்பறை இல்லை ஊனமுற்றோர்களுக்கு கட்டப்பட்ட கழிப்பறை பயன் பாட்டிற்கு வரவில்லை என்பது போன்ற பல்வேறு குறைகள் உள்ள பஸ் நிலையம் எப்பொழுது நல்ல நிலைமைக்கு வரும் என கேள்விக்குறியாக உள்ளன.

எனவே பேரூராட்சி நிர்வாகம் உடனடியாக தலையிட்டு மழைக்காலம் மற்றும் வெயில் காலங்களில் பெண்கள் மற்றும் பயணிகள் அமர்ந்து செல்ல ஒரு நிழற்குடை அமைக்க வேண்டும் எனவும் கடைகளில் ஒழுங்குபடுத்தி பிளாட்பாரத்தில் பஸ்கள் நிற்பதற்கு ஏதுவாக செயல்படுத்த வேண்டும் எனவும் பேரூராட்சி நிர்வாகத்தை தேமுதிக கட்சியின் சார்பாக வேண்டுகோள் வைக்கின்றோம். தவறும் பட்சத்தில் மாபெரும் ஆர்ப்பாட்டம் நடைபெறும் என தெரிவித்தார்



கேரள மாநிலம் பத்தனம்திட்டா பகுதியில் ஐயப்ப பக்தர்கள் சென்ற பேருந்தும் காரும் மோதி விபத்து ஏற்பட்டது. இதில், காரில் சென்ற புதுமண தம்பதி உட்பட ஒரே குடும்பத்தை சேர்ந்த 4 பேர் உடல் நசுங்கி பரிதாபமாக பலியாகினர். சம்பவ இடத்திற்கு விரைந்த காவலர்கள் இறந்தவர்களின் உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்காக மருத்துவமனைக்கு அனுப்பி வைத்து விசாரித்து வருகின்றனர். இச்சம்பவம் அப்பகுதியில் சோகத்தை ஏற்படுத்தியுள்ளது..




வேலூர் மாவட்டம், காட்பாடி தாலுகா, அம்முண்டி ஊராட்சியில் வேலூர் கூட்டுறவு சர்க்கரை ஆலையின் 202425ம் ஆண்டுக்கான கரும்பு அரவையை கைத்தறி மற்றும் துணிநூல் துறை அமைச்சர் ஆர்.காந்தி, தொடங்கி வைத்து. கரும்பு விவசாயிகளுக்கு ரூ.3.84 கோடி ஊக்கத்தொகை, ரூ.1.50 கோடி மதிப்பில் வேளாண் இயந்திரங்கள் மற்றும் பருவசீவல் நாற்று போன்ற நலத்திட்ட உதவிகளை வழங்கினார். இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் சுப்புலெட்சுமி, சட்டமன்ற உறுப்பினர்கள் ப.கார்த்திகேயன், ஈஸ்வரப்பன். வேலூர் கூட்டுறவு சர்க்கரை ஆலை இணை பதிவாளர் கு.நர்மதா, மக்கள் பிரதிநிதிகள், அரசு துறை சார்ந்த அலுவலர்கள் பணியாளர்கள் மற்றும் கரும்பு விவசாயிகள் மற்றும் பயனாளிகள் உட்பட பலர் உடனிருந்தனர்.

## தாம்பரம் மாநகர சார்பில் துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலிக்கு உற்சாக வரவேற்பு





தாம்பரம் டிச16

செங்கல்பட்டு மாவட்டம் தாம்பரம் மாநகரில் திமுக இளைஞர் அணி செயலாளரும் தமிழ்நாடு துணை முதலமைச்சருமான உதயநிதிஸ்டாலின் சென்னை கிறிஸ்தவ கல்லூரியில், எம்.ஆர்.எஃப் நிறுவனத்தின் பங்களிப்போடு உருவாக்கப்பட்டுள்ள MCC-MRF Innovation Park ஐ திறந்து வைத்தார் முன்னதாக காஞ்சி வடக்கு மாவட்ட கழகச் செயலாளர், குறுசிறு மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் தா.மோ.அன்பரசன் தலைமையில், தாம்பரம் மாநகர செயலாளர், தாம்பரம் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ஆர். ராஜா எம்எல்ஏ, காஞ்சி வடக்கு மாவட்ட துணை செயலாளர், பல்லாவரம் சட்டமன்ற உறுப்பினர் இ.கருணாநிதி எம்எல்ஏ ஆகியோர் முன்னிலையில் துணை முதலமைச்சருக்கு உற்சாக வரவேற்பு அளிக்கபட்டது..

இந்நிகழ்வில் மாவட்ட ஊராட்சிகுழு தலைவர் படப்பை மனோகரன்,மேயர் வசந்தகுமார் கமலக்கண்ணன், துணைமேயர் கோ.காமராஜ், மண்டல குழு தலைவர்கள் டி..காமராஜ், வே.கருணாநிதி இ.ஜோசப் அண்ணாதுரை, , எஸ்.இந்திரன், ஒன்றிய தலைவர்கள், நகர மன்ற தலைவர் எம்.கே.டி.கார்த்திக், மாவட்ட, மாநகர கழக நிர்வாகிகள், பகுதி, ஒன்றிய, நகர கழக செயலாளர்கள் மற்றும் நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள், மாவட்ட மற்றும் மாநகர அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், வட்ட கழக செயலாளர்கள், இளைஞரணி, மாணவரணி, மகளிரணி உள்ளிட்ட கழக தோழர்கள், பொதுமக்கள் பெருந்திரளாக கலந்து கொண்டு சிறப்பித்தனர்...




இராமநாதபுரம் மாவட்ட சட்டப்பணிகள் ஆணைக்குழுவின் தலைவர் /முதன்மை மாவட்ட நீதிபதி அவர்களின் அறிவுறுத்தலின் பேரில் தமிழ்நாடு மாநில சட்டப் பணிகள் ஆணையக் குழுவின் வழிகாட்டுதலின்படியும் படியும் பரமக்குடி வட்ட சட்ட பணிகள் குழுவின் தலைவர் வழிகாட்டுதலின் படியும் பரமக்குடி ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகத்தில் தேசிய மக்கள் நீதிமன்றம் நடைபெற்றது. இதில் 189 வழக்குகள் முடிக்கப்பட்டு தீர்வு காணப்பட்டது.இதில் கூடுதல் மாவட்ட நீதிபதி சாந்தி தலைமை தாங்கினார். மேலும் சார்பு நீதிபதி சதீஷ், மாவட்ட உரிமையியல் நீதிபதி சுப்ரமணியன், குற்றவியல் நீதிபதி பாண்டி மகாராஜா, வழக்கறிஞர்கள் சங்க தலைவர் அ. பூமிநாதன், செயலாளர் யுவராஜ் மற்றும் மூத்த இளம் வழக்கறிஞர்கள் கலந்து கொண்டார்கள். இதற்கான ஏற்பாட்டினை வட்ட சட்ட பணிகள் குழுவின் நிர்வாக உதவியாளர் முத்து விஜயன் மற்றும் சட்ட தன்னார்வலர் முருகேசன் செய்திருந்தார்கள்.

## 198வது வட்ட திமுக சார்பில் உதயநிதியின் உதய நாள் விழா நலத்திட்ட உதவிகள் வழங்கல் பொதுக்கூட்டம்

சோழிங்கநல்லூர் டிச16

சென்னை தெற்கு மாவட்டம், சோழிங்கநல்லூர் தொகுதிக்குட்பட்ட 198 வது வட்டம், காரப்பாக்கம், அண்ணா தெருவில் தெற்கு மாவட்ட கழகச் செயலாளர், மருத்துவ மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சருமான மா.சுப்பிரமணியன் ஆணைக்கிணங்க , நவம்பர் 27ல் தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் பிறந்த நாளை முன்னிட்டு உதயநிதியின் உதய நாள் விழாவில் திமுக அரசின் சாதனைகளை விளக்கி பொதுக்கூட்டம் 198 வது வட்டக் கழகச் செயலாளர் காரப்பாக்கம் பா.தேவகுமார் தலைமையில் சோழிங்கநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் ச. அரவிந்த் ரமேஷ் முன்னிலையில் மகளிர் அனைவருக்கும் சில்வர் பாத்திரங்கள் பரிசு பொருட்களை வழங்கி சிறப்பாக நடைபெற்றது. விழாவில் வரவேற்புரையாக பகுதி துணைச் செயலாளர் ப.சாந்திபசுபதி, வட்ட அவைத் தலைவர் சி.கோபால், வட்டத் துணைச் செயலாளர்கள் பி. முருகன், அ. வேணுராஜ் ,டி.தேவகி வட்ட பொருளாளர் எம். பி. பெருமாள், பகுதி பிரதிநிதிகள் : ஆ.குமாரசாமி,





எஸ்.கடும்பாடி, சி. சிவா, வே.பழனி, எஸ். ஆர். யு.நரேஷ் குமார், வட்ட செயற்குழு உறுப்பினர்கள்: டி. வேலு, ஏ. கார்த்திக், டி .டில்லிபாபு, பி. தாஸ், டெய்லர் வேலு, கி.ஆறுமுகம், எஸ். நாராயணன், கே.பாஸ்கர், எம். சதீஷ், தலைமைக் கழகப் பேச்சாளர் ஆற்காடு அகிலன், இளம் பேச்சாளர் ஜெ.ஜெபின், மாவட்ட துணைச் செயலாளர், பாலவாக்கம் மு.மனோகரன், த.பொதுக்குழு உறுப்பினர், புனித தோமையார் மலை ஒன்றிய கழக செயலாளர் கோவிலம்பாக்கம் ஜி. வெங்கடேசன், த.பஷீர், த. பொதுக்குழு உறுப்பினர்,முன்னாள் ஒன்றிய பெருந்தலைவர் எம். கே .ஏழுமலை, த.பொதுக்குழு உறுப்பினர் அ.அரிகிருஷ்ணன், மா. இ.அ.துணை அமைப்பாளர் ஜெ. இ.பாண்டியன், இ. அ. மா. து. அமைப்பாளர் கா.வி. தியாகராஜன், மா.மா.அ. அமைப்பாளர் பா.அருண்குமார். மா இல. அணி அமைப்பாளர் எம் பார்த்திபன் , மா.அ. அமைப்பாளர் என். அனீஸ், தொ. த. தொ.அ.ஒருங்கிணைப்பாளர் கி. ஸ்டாலின் மொழி, 199வது வட்ட கழக செயலாளர் ஜி.சங்கர், 200 வது வார்டு மாமன்ற உறுப்பினர் அ.முருகேசன், 189 வது மாமன்ற உறுப்பினர் லயன் வா. பாபு, சோழிங்கநல்லூர் மத்திய பகுதி நிர்வாகிகள் மற்றும் வட்ட கழக செயலாளர்கள் :வீ.தனசேகரன், வே.வி.குமரேசன், கே.டி.ரவி, த. ராஜேந்திரன், ஜி.ரவி ,எப். ஆரோண் (எ )அரசு, கே. ஏழுமலை, எஸ் .தயாளன், ஆர். சுரேஷ் பாபு, வட்ட கழக நிர்வாகிகள் இ.பாரி, எஸ். ஜோதி, க. ராஜேஷ் குமார் , ம.மாரியம்மாள், மாவட்ட அணிகளின் துணை அமைப்பாளர்கள் கே.சுவாமிநாதன் ஆர். புஷ்பராஜ், பி. ராஜேஷ், டி. சசிகுமார்தேவன், கே.சங்கர், மத்திய பகுதி அணிகளின் துணை அமைப்பாளர்கள் டி .சம்பத், பி. வேண்ராசி, எஸ் ஆர் யூ சுரேஷ் ,பி.ராஜேஷ்குமார், இரா.ஞானபிரகாஷ் ,கே .லோகநாதன், எஸ்.மகேஸ்வரன், ஆர். ஷெரிஃப் ,ஏ.சந்திரன், வி. புனிதா, பி .அமுதா, ஜி. சரத்குமார், வீ. தமிழ்ச்செல்வன், சி. விமல், எம். பிரேம்குமார், பி வசந்தகுமார், மாவட்ட கவுன்சிலர் வேதகிரி, முன்னாள் கவுன்சிலர் தேவகி தேவேந்திரன், நன்றி உரையாக மா.அ.ஓ. அணி துணை அமைப்பாளர் கே. சாமிநாதன் உள்ளிட்ட 198வது வட்ட தி. மு.க.சோழிங்கநல்லூர் கிழக்கு பகுதி சென்னை தெற்கு மாவட்ட, வட்ட, பகுதி, ஒன்றிய, ஊராட்சி கழக நிர்வாகிகள் பொதுமக்கள் அனைவரும் திரளாக கலந்து கொண்டனர்.






கன்னியாகுமரி மகாதானபுரம் ரவுண்டானா அடுத்த வெட்டிமுரிச்சான் கோவில் முன்பு இன்று ஆட்டோ மீது அரசு பேருந்து நேருக்கு நேர் மோதி விபத்து,இதில் ஆட்டோ அப்பளம் போல் நொறுங்கியது,அரசு பேருந்தின் முன்பக்க கண்ணாடி உடைந்து சேதம் அடைந்துள்ளது, அதிர்ஷ்டவசமாக உயிர் சேதம் ஏற்படவில்லை விபத்து சம்பவம் குறித்து கன்னியாகுமரி போக்குவரத்து காவல்துறையினர் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்..

## கன்னியாகுமரியில் நாளை மின்தடை அறிவிப்பு



கன்னியாகுமரி, டிச.16

கன்னியாகுமரியில் நாளை டிச17 (செவ்வாய்கிழமை) அன்று காலை 08:00 மணி முதல் மாலை 2:00 மணி வரை மீனாட்சிபுரம் துணை மின் நிலையத்தில் மாதாந்திர பராமரிப்பு பணிகள்,மின்பாதைக்கு இடையூறாக உள்ள மரகிளைகளை அகற்றுதல், தாழ்வாக செல்லும் மின்கம்பிகளை சரி செய்தல் போன்ற பராமரிப்பு பணிகள் மேற்கொள்ள இருப்பதால் கீழ்கண்ட இடங்களில் மின் விநியோகம் நிறுத்தம் செய்யப்படுகிறது. கோட்டார், இடலாகுடி, கணேசபுரம், பறக்கை ரோடு, அப்துல்காதர் மருத்துவமனை பகுதி, வெள்ளாடிச்சிவிளை, கரியமாணிக்கபுரம், ஒழுகினசேரி, ராஜாபாதை மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகள் ஆகும்.

மேலும் வடிவீஸ்வரம் பகுதியில் புதிய மின்பாதை அமைக்கும் பணி நடைபெறவுள்ளதால் வடிவீஸ்வரம், மீனாட்சிபுரம், தளவாய் தெரு, பத்தல்விளை, வேப்பம்மூடு, மீனாட்சி கார்டன், பெருமாள் மண்டபம் சாலை மற்றும் அதனை சுற்றியுள்ள பகுதிகளில் நாளை காலை 08:00 மணி முதல் மாலை 5:00 மணி வரை மின் நிறுத்தம் செய்யப்படும் என தெரிவித்து கொள்ளப்படுகிறது.

## கன்னியாகுமரியில் பறிமுதல் செய்த வாகனங்கள் பொது ஏலம்



கன்னியாகுமரி டிச16

கன்னியாகுமரி மாவட்ட மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்டு அரசுடமையாக்கப்பட்ட 41 இருசக்கர, மூன்று சக்கர வாகனங்கள் இருக்கும் நிலையில் அரசு ஆணை எண்.41/2024 ன் படி இன்று 16.12.2024 ம் தேதி காலை 11.00 மணிக்கு கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில் ஆயுதப்படை மைதானத்தில் கன்னியாகுமரி மாவட்ட காவல் கண்காணிப்பாளர், அவர்கள் முன்னிலையில் பொது ஏலம் நடைபெறுகிறது. தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி எண்கள் ஆய்வாளர், நாகர்கோவில் மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு 04652220377, ஆய்வாளர், தக்கலை மதுவிலக்கு அமலாக்கப்பிரிவு 04651271198 காவல் துணை கண்காணிப்பாளர் மதுவிலக்கு அமலாக்கப் பிரிவு 04651224833.



கன்னியாகுமரியில் திருவள்ளுவர் சிலை விவேகானந்தர் நினைவு மண்டபம் இடையே அமைக்கப்பட்டு வரும் கண்ணாடி பாலத்தின் கட்டுமான பணிகளை அமைச்சர் எ.வ.வேலு ஆய்வு மேற்கொண்டார்.

## புஷ்பா 2 படத்திற்கு இந்திய அளவில் அதிவேகமாக ரூ1000 கோடி வசூல் செய்த பெருமை

சென்னை, டிச.16

சுகுமார் இயக்கத்தில் அல்லு அர்ஜுன் நடிப்பில் கடந்த 2021ம் ஆண்டு வெளியான படம் ‘புஷ்பா தி ரைஸ்’. இப்படம் மிகப்பெரிய வெற்றி பெற்றது. பிரம்மாண்ட பொருட்செலவில் ‘புஷ்பா 2 தி ரூல்’ படம் உருவாகியுள்ளது. கடந்த 5ந் தேதி வெளியான இப்படம் வசூல் ரீதியாகவும், விமர்சனம் ரீதியாகவும் நல்ல வரவேற்பை பெற்றுள்ளது.. இப்படத்தை மைத்திரி மூவி மேக்கர்ஸ் தயாரிக்க, தேவி ஸ்ரீ



பிரசாத் இசையமைத்திருந்தார். மேலும் சாம் சி எஸ் இப்படத்திற்கு பின்னணி இசை அமைத்திருந்தார். தமிழ், தெலுங்கு, இந்தி உள்ளிட்ட மொழிகளில் பான் இந்தியா படமாக வெளியானது. முதல் நாளில் இருந்தே வசூலில் பட்டையை கிளப்பி வரும் இப்படம் 6 நாட்களில் ரூ.1002 கோடி வசூலை கடந்தது. இந்திய அளவில் அதிவேகமாக இந்த சாதனையை எட்டியுள்ள படம் என்ற பெருமையும் புஷ்பா 2 படத்திற்கு கிடைத்துள்ளது. ராஷ்மிகா மந்தனா, பகத் பாசில் ஆகியோர் முக்கிய கதாபாத்திரங்களில் நடித்துள்ளனர்..இந்த படத்தை ரசிகர்கள் மிகப்பெரிய அளவில் கொண்டாடிவரும் நிலையில், கடந்த 10நாட்களில் உலக அளவிலான பாக்ஸ் ஆபிஸில் ரூ.1190 வசூலித்துள்ளதாக கூறப்படுகிறது. இந்திய அளவில் வசூல் ரூ.800 கோடிக்கும் அதிகமாக வசூல் செய்துள்ளதாக கூறப்படுகிறது.

Printed , published by A.PONRAJ and printed at “SRI SAAI PRINTERS”No.122,Neethipathi,Rajasekaran Street, vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ.8508502161